04/03/2019
அசல் வழக்கு எண் 241/2017

வாசா 1 முத்து

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தில் தரைதளத்தில் 3 கடைகளும் முதல் தளத்தில் 3 கடைகளும் உள்ளது. சொத்துவிபரத்தில் 4388 1/2 சதுரடியில் உள்ள இரண்டு அடுக்கு கட்டிடம் என காட்டியுள்ளோம் கடை விபரத்தினை சொல்லவில்லை என்றால் சரிதான். கட்டிடம் மற்றும் கடைகள் அனைத்திற்கும் சேர்த்து தான் பரிகாரம் கோரியுள்ளோம். கீழ்தளத்தில் 4 கடைகள் என பிரதிவாதிகள் சொல்வது தவறானதாகும். கீழ்தளத்தில் ஒரு விசாலமான அறை உள்ளது. மேல்தளத்திலும் அவ்வாறு தான் அமைந்துள்ளது. மேல்தளத்தில் உள்ள விசால அறையில் தான் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். கடைகள் அனைத்தும் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தரைதளத்தில் உள்ள ஒரு கடை என்வசம் தான் உள்ளது. அந்த கடையில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் 1ம் பிரதிவாதியின் அனுமதியின் பேரில் தான் வசம் வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் அமைந்துள்ள அனைத்து கடைகளுக்கும் 1ம் பிரதிவாதியே வாடகை வசூல் செய்கிறார் என்று சொன்னால் கீழ்தளத்தில் 2 கடைகளுக்கும் மேல தளத்தில் உள்ள 1 கடைக்கும் வாடகை வசூல் செய்கிறார் மேல்தளத்தில் உள்ள மற்றொரு கடை காலியாக உள்ளது மற்றொரு கடைக்கான வாடகையை அசோகன் வசூல் செய்து வருகிறார். காலியாக உள்ள கடையினை வாடகைக்கு விட்டபோது அந்த வாடகையையும் 1ம் பிரதிவாதி வசூல் செய்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் பாகம் கேட்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. கோவிந்தசாமி படையாச்சி ஒரு உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயில் ஆவணத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 17.06.2002ல் என்வசம் உள்ள அந்த கடையினையும் காலி செய்து கொடுப்பதாக கூறினேன் என்றால் சரியல்ல. சாந்தி என்பவர் எனது

சகோதரி அவரை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. புல எண் 568,569ல் 4000 சதுரடி மனையினை நானும் எனது மனைவியும் அடகு வைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு அடகு வைத்தோம் என்றும் அதனை கேட்டதனால் தான் எனக்கும் எனது சகோதரருக்கும் மன வருத்தம் வந்தது என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும்எனக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு அதில் ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். புல எண் 568 மற்றும் 569ல் கண்ட 75,664 சதுரடியும் விற்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு விற்றதிலிருந்து எனக்கு ஒரு பாகம் வங்கியில் போட்டார்கள் வங்கி கணக்கை பார்த்தால் தான் எவ்வளவு போட்டார்கள் என்று எனக்கு தெரியும். 17.06.2002ல் விடுதலைபத்திரம் ஒன்று எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சேர வேண்டிய பாகத்திற்கு பணமாக வாங்கி கொண்டுவிட்டேன் என்றும் அந்த விபரங்களை மறைத்து வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் இந்தியன் வங்கி வாடகைக்கு உள்ளது ஆரம்பத்தில் ரூ.5,500/-ம் தற்போது ரூ.20,000/-மும் வாடகை வசூல் செய்து வருகிறார். வாடகை விபரத்தினை வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் தெரிந்து கொண்டேன். கீழே உள்ள கடையில் நான் ஆரம்பத்தில் எஸ்டிடி பூத் வைத்திருந்தேன். தற்போது கூரியர் நிறுவனம் வைத்துள்ளேன். அந்த கடையை பொறுத்துவரை நான் அனுமதியின் பேரிலான அனுபவதாரர் என்றால் சரியல்ல. வங்கியில் கடன் வாங்கி தான் வங்கிக்கான அலுவலகம் கட்டப்பட்டது வாடகை தொகையினை மேற்படி கடனுக்காக வங்கி நிர்வாகம் எடுத்துக் கொள்கிறது என்றால் சரிதான். குடும்பத்தில் மூத்தவர் நான் தான். தாவா கட்டிடத்திற்கான மின் இணைப்பு ஆரம்பத்தில் எனது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது அதன் பின்னிட்டு யார் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக 3 நபர்களுக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்தேன். அதன் பின்னிட்டு மின்சார வாரியத்திற்கு ஒப்புதல் கடிதம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 10.02.2004ல் எனது கைபட மின்சார வாரியத்திற்கு கடிதம் எழுதி கொடுத்துள்ளேன் என்ற சொன்னால் சரியல்ல. வங்கியில் கடன் வாங்குவதற்காக மூலப்பத்திரங்கள் கொடுத்துள்ளேன். மூலப்பத்திரங்கள்

வங்கியிலிருந்து கொடுக்கப்பட்டுவிட்டன அதனை 1ம் பிரதிவாதியே வாங்கி கொண்டார். மூலப்பத்திரங்கள் வாங்குவதற்கு அனைவரும் கையெழுத்து போடவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு கையெழுத்து போடும்போது ரூ.2 லட்சம் வாங்கி கொண்டு கையெழுத்து செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. ஜெயந்தி 1ம் பிரதிவாதியின் மனைவி. 17.02.2004ம் தேதி அவரிடமிருந்து ரூ.1,75,000/- பணம் பெற்றுக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தங்கை சாந்தி என்பவரிடம் 24.08.2004ம் தேதி கனரா வங்கி காசோலை மூலம் ரூ.5 லட்சம் பணம் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். எனது பாக வீதத்திற்கு மேல் நான் பணம் பெற்றுக் கொண்டுவிட்டேன் என்றும் அதனை நான் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. பணத்தினை பெற்றுக் கொண்டுவிட்டு கடையை காலி செய்து கொடுக்காமல் இருக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதன்பிறகு வழக்கறிஞர் மூலம் ஒரு அறிவிப்பு அனுப்பினேன். எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். அதில் கண்ட ரூ.4 லட்சம் அடமான தொகையினை நான் பெற்றுக் கொண்டேன். ஆனால் குடும்பத்திற்காக பெற்றுக் கொண்டேன். செலவு செய்த கணக்கினை எனது சகோதரன் சம்பத்திடம் ஒப்படைத்துவிட்டேன். எனது சகோதரன் சம்பத் என்னுடைய வழக்கிற்கு என்ன கட்சி செய்கிறார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். அவர் வெளிநாட்டில் இருக்கும் போது சொத்துக்கள் விற்பது சம்பந்தமாக மனைவி மூலமாக வங்கி பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த ஆவணங்களை என்மூலமாக எடுத்துவரவேண்டும் என கூறியிருந்தார் என்றும் அவ்வாறு எடுத்து வரும்போது பிரதிவாதியின் ஆவணங்களையும் நான் எடுத்து சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மற்ற பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.